தமிழ்நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1972 நவம்பர் 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. கே. ஏ. மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

திரு. சி. எச். கனைன், திரு. மா. இராசாங்கம், திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைச்சேரி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1952-ஆம் ஆண்டு முதல் 1956-ஆம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. சி. எச். கனைன் அவர்கள் 20—10—1972-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

1962-ஆம் ஆண்டு உத்தமபாளையம் தொகுதியிலிருந்தும், பின் 1967-ஆம் ஆண்டு கம்பம் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப் பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராக இருந்து, பின் 1971-ஆம் ஆண்டு முதல் திண்டுக்கல் தொகுதியிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டு பாராளுமன்றத்தின் மக்கள் அவையில் உறுப்பின ராக இருந்தவருமான திரு. மா. இராசாங்கம் அவர்கள் 22—10—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள் தொகுதியின் சார் பாகத் தேர்தெடுக்கப்பட்டு சட்டமன்ற மேலவையில் 1952-ஆம் ஆண்டு முதல் 1972-ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் வரை உறுப்பின ராகவும், 1969-ஆம் ஆண்டு முதல் 1972-ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் வரை சட்டமன்ற மேலவையின் துணைத் தலைவராகவும் இருந்த திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 20—10—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

இப் பேரவையின் சார்பில் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத் தையும் அன்னார்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்).

(2) அறிவிப்பு.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துள்ள உறுப்பினர்களுக்குத் தனி இடம் ஒதுக்குதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இப்பேரவையின் உறுப்பினர்களான திரு. எம். ஜி. இராமச்சந்திரன். திரு. சு. ம. துரைராஜ், திரு. முனு ஆதி. திரு. ஜி. ஆர். எட்மண்ட், திரு. கே. காளிமுத்து, திரு. சி. வே. வேலப்பன். திரு. குழ. செல்லையா, திரு. பெ. சௌந்தரபாண்டியன். திரு. துரை கோவிந்தராசன் ஆகியோர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துள்ளதாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்புச் செயலாளர் திரு. கே. எ. கிருஷ்ணசாமி ஒரு கடிதம் எழுதியுள்ளார். இந்த உறுப்பினர்களிடமிருந்தும் கடிதம் வந்திருப்பதால், அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளபடி அந்தக் கட்சியின் உறுப்பினர்களுக்குத் தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. நடைமுறைக் கேள்விகள்

(அ) அமைச்சரவையில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் குறித்து அவைக்கு அறிவிக்கப்படாதது குறித்து.

THIRU K. T. K. THANGAMANI : Mr. Speaker, Sir, I am submitting a point of order. I understand questions are going to be taken up now.

MR. SPEAKER : Is the hon. Member raising a point of order?